**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 11/2021</u>**

பெயர் : பானுமதி D.W.1. (Cross)

க/பெ. : சின்னபிள்ளை

தேதி : 16.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

வாதிகள் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நான் வாதிகளிடம் அடமானம் வைத்த நிலத்தை என்னிடம் தரமாட்டேன் என கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து வாதிகள் வசம் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து நான் அசல் வழக்கு எண் 103/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கை நான் ஏன் தொடர்ந்து நடத்தவில்லை என்றால் என்னால் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு வர இயலாததால் நடத்த முடியவில்லை. அசல் வழக்கு எண் 103/2021 என்ற வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தேன் என்றால் தாவா சொத்தை வசபரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தேன்.